மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.02/2024
அ.வ.எண்.186/2024

1. பழனியப்பன்
2. சாமிதுரை ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. ஆண்டியப்பன்
2. சதீஷ்
3. அசோக்குமார் ... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 09.04.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.J.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராகவும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்கள், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா கோவிலானது சுமார் 150 வருடங்களுக்கு முன்பு ரெட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்களால் கோல்நாயக்கன்பட்டி கிராமம், ரெட்டியூரில் அமைக்கப்பட்டது.

கோல்நாயக்கன்பட்டி கிராமத்தில் வன்னியர் சமூகத்தை சேர்ந்த மக்கள் அதிகமாக இருந்ததால் சமூக நல்லிணக்கத்திற்காக தாவா கோவிலில் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு ரெட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்களால் கோவில் திருவிழாவின் போது கிடா வெட்டுதல், 2வது திருநீறு வழங்குதல் போன்ற சில சிறப்புரிமைகள் அளிக்கப்பட்டது. பின்னிட்டு 1932ம் வருடத்தில் மேற்படி உரிமைகள் தொடர்பாக பிரச்சனை இருந்ததால் பஞ்சாயத்து ஏற்பட்டு, அதில் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்கள் கோவிலில் கிடா வெட்டிக்கொள்ளலாம் எனவும், 2வது திருநீறு பெற்றுக் கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ii) தாவா கோவிலில் முதல் திருநீறு பெறும் உரிமை ரெட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கே உள்ளது. இந்நிலையில் 1932 முதல் மனுதாரர்களின் மூதாதையர்கள் தாவா கோவிலில் கிடா வெட்டியும், 2வது திருநீறு பெற்றும் வந்தனர். பின்னிட்டு மனுதாரர்களின் குடும்பத்தினர் மேற்படி உரிமையை தக்க வைத்துக் கொண்டுள்ளனர். இந்நிலையில் மேற்படி உரிமைகள் தொடர்பாக வன்னியர் சமூகத்தை சேர்ந்த வேறு சில நபர்கள் பிரச்சனை செய்ததால் மனுதாரர்களின் முன்னோரான பழனிச்சாமி கவுண்டர் என்பவர் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.291/1986 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில் அவருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு மேற்படி பாரம்பரிய உரிமையை கடைபிடிப்பது தொடர்பாக பழனிச்சாமி கவுண்டரால் மனுதாரர் குடும்பத்திற்கு சம்மதக் கடிதம் ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

(iii) 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் மேற்படி பழனிச்சாமி கவுண்டரின் மகன்கள் ஆவர். அவர்கள் வேலைநிமித்தமாக வெளியூரில் குடிபெயர்ந்துவிட்டதால், மனுதாரர்களின் குடும்பத்தினரும், 7ம் எதிர்மனுதாரரும் மற்றொரு சந்திரசேகர் ஆகியோர் மட்டுமே வன்னியர் சமுதாயம் சார்பாக தாவா கோவிலில் பூஜைகளில் பங்கேற்றும், நேர்த்திக்கடன்கள் செலுத்தியும் வருகின்றனர். 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் மேற்படி தாவா கோவிலில் மனுதாரர்களுக்குள்ள உரிமையை பொறுத்து 3ம் நபர்கள் ஆவர். மேற்படி எதிர்மனுதாரர்கள் தாவா கோவிலில் கிடா

வெட்டுவதற்கும், 2 வது திருநீறு பெறுவதற்கும் மனுதாரர்களுக்குள்ள உரிமையை மறுத்து, பிரச்சனை செய்து வருகிறார்கள்.

(iv) 2024 ம் வருடம் சித்திரை மாதம் தாவா கோவில் திருவிழாவின் போது மனுதாரர்கள் குடும்பத்தினர் தாவா கோவிலில் கிடா வெட்டுவதையும், 2 வது திருநீறு பெறுவதையும் தடுக்க மேற்படி 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் முயற்சித்தனர். ஊர் பொதுமக்கள் மற்றும் கோவில் கமிட்டியினர் தலையீட்டால் தற்காலிகமாக மேற்படி பிரச்சனை தடுக்கப்பட்டது. பின்னிட்டு கடந்த 17.09.2024 ம் தேதியில் மேற்படி பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டு, அதில் எடுக்கப்பட்ட முடிவிற்கு 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் கட்டுப்படாமல், மனுதாரர்களின் உரிமையை மறுப்பதாலும், தடுக்க முயற்சிப்பதாலும், தங்களுக்கு தான் மேற்படி பாரம்பரிய உரிமை உள்ளதாக கூறி பிரச்சனை செய்வதாலும், விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3 ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்:</u>
<u>(இப்பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 1, 3 எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா சொத்து கோல்நாயக்கன்பட்டி கிராமம், ரெட்டியூரில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் என்பது உண்மையான சங்கதியாகும். ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மாதம் சித்திரையில் கோயிலுக்கான திருவிழா கொண்டாடப்பட வேண்டும் என்றும், 2024 ம் ஆண்டு கோவிலில் திருவிழா தொடங்கியபோது எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களது ஆட்கள், வாதிகள் ஆடுகளை கோயில் கம்பத்திற்கு வழங்குவதை தடுக்க முயன்றனர் என்றும், மேலும் 2 வது திருநீரை பெறுவதில் இடையூறு செய்தனர் என்றும், ஆனால் ஊர் ரெட்டியார் மற்றும் பிற கோயில் கமிட்டியினர் எதிர்மனுதார்களிடமிருந்து

மனுதாரர்களின் உரிமைகளை பாதுகாத்தனர் என்றும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு பதிலாக 2வது திருநீறு பெற தனக்கு உரிமையுள்ளதாக கூறுகிறார் என்றும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானதாகும்.

(ii) மனுதாரர்கள் 15 கானேசுகார குடும்பங்களில் ஒரு குடும்பத்தினர் ஆவர். மேற்படி கோவில் திருவிழாவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு கானேசு செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதாவது கரகம் தூக்குவது, திருநீர் பெறுவது, சாமி அழைப்பது, கம்பத்திற்கு ஆடு பலியிடுவது போன்ற உரிமைகளாகும். மேற்படி மனுதாரர்களின் தந்தை வகையறாவுக்கு கோவில் கம்பத்திற்கு ஆடு பலியிடுவதற்கான உரிமை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 2ம் திருநீரை பெறுவதற்கான உரிமை எப்போதும் மனுதாரர்களுக்கோ அல்லது அவர்களின் தந்தைக்கோ வழங்கப்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே மேற்படி 2ம் திருநீரை பெறுவதற்கான உரிமையை 1ம் எதிர்மனுதாரரின் தந்தைக்கும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகனான 1ம் எதிர்மனுதாரருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மனுதாரர்கள் எப்போதும் ஊர் வழக்கத்திலேயே இல்லாத உரிமைகளை தங்களுடைய உரிமைகள் என கூறியும், பல பொய்யான சங்கதிகளை கூறியும், மேற்படி ராஜகோபால் என்ற தனி நபரின் கால்புணர்ச்சி காரணமாக, மேற்படி கோவில் திருவிழாவை நடத்தக்கூடாது என்ற நோக்கத்துடன் வழக்கை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

(iii) மேற்படி ராஜகோபால் என்பவர் தான் தான் மேற்படி மாரியம்மன் கோவிலின் தர்மகர்த்தா என்றும், தனது தலைமையில் தான் கோவில் திருவிழா நடக்க வேண்டும் என்றும், மேற்படி ராஜகோபாலை தவிர 15 கானேசுக்கார குடும்பங்களில் ஒருவரான 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன்கள் மற்றும் இன்ன பிற குடும்ப உறுப்பினர்களையும் சேர்த்து அவர்களது தலைமையில் எந்த திருவிழாவும் நடைபெறக் கூடாது என அவர்கள் மீது நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.177/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து, அவ்வழக்கு நிலுவையில் உள்ளது. பல பொய்யான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 3 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு வாதுரைகளும் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப் படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் வாதிகள்/மனுதாரர்களால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா கோவிலானது சுமார் 150 வருடங்களுக்கு முன்பு ரெட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்களால் கோல்நாயக்கன்பட்டி கிராமம், ரெட்டியூரில் அமைக்கப்பட்டது என்றும், கோல்நாயக்கன்பட்டி கிராமத்தில் வன்னியர் சமூகத்தை சேர்ந்த மக்கள் அதிகமாக இருந்ததால் சமூக நல்லிணக்கத்திற்காக தாவா கோவிலில் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு ரெட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்களால் கோவில் திருவிழாவின் போது கிடா வெட்டுதல், 2வது திருநீறு வழங்குதல் போன்ற சில சிறப்புரிமைகள் அளிக்கப்பட்டது என்றும், பின்னிட்டு 1932ம் வருடத்தில் மேற்படி உரிமைகள் தொடர்பாக பிரச்சனை இருந்ததால் பஞ்சாயத்து ஏற்பட்டு, அதில் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்கள் கோவிலில் கிடா வெட்டிக்கொள்ளலாம் எனவும், 2வது திருநீறு பெற்றுக் கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(ii) மேலும் தாவா கோவிலில் முதல் திருநீறு பெறும் உரிமை ரெட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கே உள்ளது என்றும், இந்நிலையில் 1932 முதல் மனுதாரர்களின் மூதாதையர்கள் தாவா கோவிலில் கிடா வெட்டியும், 2வது திருநீறு பெற்றும் வந்தனர்.

பின்னிட்டு மனுதாரர்களின் குடும்பத்தினர் மேற்படி உரிமையை தக்க வைத்துக் கொண்டுள்ளனர் என்றும், இந்நிலையில் மேற்படி உரிமைகள் தொடர்பாக வன்னியர் சமூகத்தை சேர்ந்த வேறு சில நபர்கள் பிரச்சனை செய்ததால் மனுதாரர்களின் முன்னோரான பழனிச்சாமி கவுண்டர் என்பவர் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.291/1986 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில் அவருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு மேற்படி பாரம்பரிய உரிமையை கடைபிடிப்பது தொடர்பாக பழனிச்சாமி கவுண்டரால் மனுதாரர் குடும்பத்திற்கு சம்மதக் கடிதம் ஒன்று அளிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் மேற்படி பழனிச்சாமி கவுண்டரின் மகன்கள் என்றும், அவர்கள் வேலைநிமித்தமாக வெளியூரில் குடிபெயர்ந்துவிட்டதால், மனுதாரர்களின் குடும்பத்தினரும், 7ம் எதிர்மனுதாரரும் மற்றொரு சந்திரசேகர் ஆகியோர் மட்டுமே வன்னியர் சமுதாயம் சார்பாக தாவா கோவிலில் பூஜைகளில் பங்கேற்றும், நேர்த்திக்கடன்கள் செலுத்தியும் வருகின்றனர் என்றும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் மேற்படி தாவா கோவிலில் மனுதாரர்களுக்குள்ள உரிமையை பொறுத்து 3ம் நபர்கள் என்றும், மேற்படி எதிர்மனுதாரர்கள் தாவா கோவிலில் கிடா வெட்டுவதற்கும், 2வது திருநீறு பெறுவதற்கும் மனுதாரர்களுக்குள்ள உரிமையை மறுத்து, பிரச்சனை செய்து வருகிறார்கள் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) மேலும் 2024ம் வருடம் சித்திரை மாதம் தாவா கோவில் திருவிழாவின் போது மனுதாரர்கள் குடும்பத்தினர் தாவா கோவிலில் கிடா வெட்டுவதையும், 2வது திருநீறு பெறுவதையும் தடுக்க மேற்படி 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் முயற்சித்தனர் என்றும், ஊர் பொதுமக்கள் மற்றும் கோவில் கமிட்டியினர் தலையீட்டால் தற்காலிகமாக மேற்படி பிரச்சனை தடுக்கப்பட்டது என்றும், பின்னிட்டு கடந்த 17.09.2024ம் தேதியில் மேற்படி பிரச்சனை தொடர்பாக பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டு, அதில் எடுக்கப்பட்ட முடிவிற்கு 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் கட்டுப்படாமல், மனுதாரர்களின் உரிமையை மறுப்பதாலும், தடுக்க

முயற்சிப்பதாலும், தங்களுக்கு தான் மேற்படி பாரம்பரிய உரிமை உள்ளதாக கூறி பிரச்சனை செய்வதாலும், விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(v) 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து கோல்நாயக்கன்பட்டி கிராமம், ரெட்டியூரில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் என்பது உண்மையான சங்கதி என்றும், ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மாதம் சித்திரையில் கோயிலுக்கான திருவிழா கொண்டாடப்பட வேண்டும் என்றும், 2024ம் ஆண்டு கோவிலில் திருவிழா தொடங்கியபோது எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களது ஆட்கள், வாதிகள் ஆடுகளை கோயில் கம்பத்திற்கு வழங்குவதை தடுக்க முயன்றனர் என்றும், மேலும் 2வது திருநீரை பெறுவதில் இடையூறு செய்தனர் என்றும், ஆனால் ஊர் ரெட்டியார் மற்றும் பிற கோயில் கமிட்டியினர் எதிர்மனுதார்களிடமிருந்து மனுதாரர்களின் உரிமைகளை பாதுகாத்தனர் என்றும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு பதிலாக 2வது திருநீறு பெற தனக்கு உரிமையுள்ளதாக கூறுகிறார் என்றும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(vi) மேலும் மனுதாரர்கள் 15கானேசுகார குடும்பங்களில் ஒரு குடும்பத்தினர் ஆவர். மேற்படி கோவில் திருவிழாவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு கானேசு செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றும், அதாவது கரகம் தூக்குவது, திருநீர் பெறுவது, சாமி அழைப்பது, கம்பத்திற்கு ஆடு பலியிடுவது போன்ற உரிமைகள் என்றும், மேற்படி மனுதாரர்களின் தந்தை வகையறாவுக்கு கோவில் கம்பத்திற்கு ஆடு பலியிடுவதற்கான உரிமை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி 2ம் திருநீரை பெறுவதற்கான உரிமை எப்போதும் மனுதாரர்களுக்கோ அல்லது அவர்களின் தந்தைக்கோ வழங்கப்படவில்லை என்றும், ஆரம்பத்திலிருந்தே மேற்படி 2ம் திருநீரை பெறுவதற்கான உரிமையை 1ம் எதிர்மனுதாரரின் தந்தைக்கும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகனான 1ம் எதிர்மனுதாரருக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேற்படி மனுதாரர்கள் எப்போதும் ஊர் வழக்கத்திலேயே இல்லாத உரிமைகளை

தங்களுடைய உரிமைகள் என கூறியும், பல பொய்யான சங்கதிகளை கூறியும், மேற்படி ராஜகோபால் என்ற தனி நபரின் கால்புணர்ச்சி காரணமாக, மேற்படி கோவில் திருவிழாவை நடத்தக்கூடாது என்ற நோக்கத்துடன் வழக்கை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(vii) மேற்படி ராஜகோபால் என்பவர் தான் தான் மேற்படி மாரியம்மன் கோவிலின் தர்மகர்த்தா என்றும், தனது தலைமையில் தான் கோவில் திருவிழா நடக்க வேண்டும் என்றும், மேற்படி ராஜகோபாலை தவிர 15 கானேசுக்கார குடும்பங்களில் ஒருவரான 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன்கள் மற்றும் இன்ன பிற குடும்ப உறுப்பினர்களையும் சேர்த்து அவர்களது தலைமையில் எந்த திருவிழாவும் நடைபெறக் கூடாது என அவர்கள் மீது நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.177/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து, அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், பல பொய்யான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(viii) இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரிலும், இவ்வழக்கு சங்கதிகளை பரிசீலனை செய்கையில், வாதிகள்/மனுதாரர்களால் தாவா கோவிலில் கிடா வெட்டுதல், 2வது திருநீறு பெறும் உரிமை தங்களுக்கு மட்டுமே உள்ளது என விளம்புகை செய்ய கோரியும், மேற்படி உரிமையில் எதிர்மனுதாரர்கள் தலையிடக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆரம்பத்திலிருந்தே மேற்படி 2ம் திருநீரை பெறுவதற்கான உரிமையை 1ம் எதிர்மனுதாரரின் தந்தைக்கும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகனான 1ம் எதிர்மனுதாரருக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேற்படி மனுதாரர்கள் எப்போதும் ஊர் வழக்கத்திலேயே இல்லாத உரிமைகளை தங்களுடைய உரிமைகள் என கூறி பிரச்சனை செய்கின்றனர் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(ix) மேற்படி இருதரப்பு வாதுரைகளையும் கருத்தில் கொள்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் நபர் வழக்கில் தனக்குள்ள முதல்தோற்ற வழக்கு (Prima facie case), வசதியின் சமநிலை (Balance of convenience), ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஆகியவற்றை நிரூபிக்க வேண்டும் என்பதே ஆகும். அவ்வகையில் மனுதாரர்கள் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு உண்டான முதல் தோற்ற வழக்கை நிரூபித்துள்ளனரா? என்பதை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் இம்மனுவில் தன் முதல்தோற்ற வழக்கை நிரூபிக்கும் வகையில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்துள்ளது தெரியவருகிறது.

(x) மேற்படி ஆவணங்களில் ம.சா.ஆ.1 தீர்ப்பாணை, ம.சா.ஆ.2 தீர்ப்பின் சான்றிட்ட நகல்களை பரிசிலனை செய்கையில், அவை மனுதாரர்களின் குடும்பத்திற்கு மேற்படி பாரம்பரிய உரிமையை அளித்ததாக கூறும் பழனிச்சாமி கவுண்டர் என்பவரால் தாவா கோவிலில் கிடா வெட்டுதல் மற்றும் 2 வது திருநீறு பெறுவது தொடர்பான உரிமையில் தலையிடக்கூடாது என வேறு 3 ம் நபர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.298/1986 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதேபோல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சம்மதக்கடிதத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி பழனிச்சாமி கவுண்டரால் மேற்படி பாரம்பரிய பாத்தியதை உரிமைகளை மனுதாரர்களும், அவர்கள் குடும்பத்தினரும் அனுபவித்துக்கொள்ளலாம் என சம்மதம் தெரிவித்து, ஒரு கடிதம் அளித்துள்ளது தெரியவருகிறது.

(xi) இந்நிலையில் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்வது யாதெனில், மேற்படி ம.சா.ஆ.3 சம்மதக் கடிதத்தில் மனுதாரர்களுக்கு மேற்படி கிடா வெட்டுதல் மற்றும் 2 வது திருநீறு பாத்தியதைகளை பயன்படுத்தி கொள்ளலாம் என கூறி சாட்சிகள் முன்னிலையில் அளிக்கப்பட்டுள்ள மேற்படி ஆவணமானது உரிமை மாற்று ஆவணம் அல்ல என்பதேயாகும். அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி ஆவணத்தை மனுதாரர்கள் தங்களது உரிமைக்கு ஆதாரமாக தாக்கல் செய்யும் நிலையில், அதில் கண்டுள்ள

சாட்சிகள் மற்றும் இதர சாட்சிகளை விசாரிக்காமல், மேற்படி ஆவணத்தின் நிறைவேற்றம் குறித்து இடைநிலை மனுவில் தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் மேற்படி ம.சா.ஆ.3 ஆவணத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு தாவா கோவிலில் கிடா வெட்டுதல் மற்றும் 2வது திருநீறு பெறும் பாத்தியதையை மேற்படி பழனிச்சாமி கவுண்டரிடமிருந்து பெற்று மனுதாரர்கள் அனுபவித்து வந்தனர் என்பதை தீர்மானிக்க இயலாது என்றும், மேற்படி பிரச்சனை சங்கதி கலந்த எழுவினா என்பதால், வழக்கு விசாரணையில் தான் அதை தீர்மானிக்க இயலும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xii) ஆகவே மேற்படி ம.சா.ஆ.3 ஆவணத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு மனுதாரர்கள் தங்கள் முதல்தோற்ற வழக்கை நிரூபித்துள்ளதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அடுத்ததாக, மனுதாரர்கள் கோரும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படாவிட்டால், மனுதாரர்களுக்கு எவ்வித ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஏற்படும் என மனுதாரர்கள் தெரிவித்துள்ள போதிலும், மனுதாரர்கள் கோரும் உரிமையானது மரியாதை மற்றும் கௌரவம் சார்ந்த உரிமை என்பதால் முதலில் இவ்வழக்கானது உரிமையியல் தன்மை கொண்ட வழக்கா? என்பதை தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பிரச்சனையையும், சங்கதியையும் அசல் வழக்கில் தரப்பினர்கள் அளிக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் என்பதால், மனுதாரர்கள் கோரும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்காவிட்டால் மனுதாரர்களுக்கு எந்த வகையில் ஈடுசெய்ய இயலா இழப்பு ஏற்படும் என்பதை தற்போது தீர்மானிக்க இயலாது எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiii) அதேபோல் இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள உறுத்துக் கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார்கள். மனுதாரர்களால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது.

எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiv) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xv) மேற்படி இந்நீதிமன்றத்தின் கருத்திற்கு வழிகாட்டும் விதமாக, மாண்பமை உச்சநீதிமன்றத்தால் ***"Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"*** என்ற வழக்கில்,

> "It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2025.04.22 15:11:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 04.03.1992 | அ.வ.எண்.291/1986 ன் தீர்ப்பாணை | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.2 | 04.03.1992 | அ.வ.எண்.291/1986 ன் தீர்ப்பு | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.3 | 22.03.1989 | சம்மதக்கடிதம் | அசல் |
| ம.சா.ஆ.4 | | கும்பாபிஷேக விழா அழைப்பிதழ் | பிரதிநகல் |
| ம.சா.ஆ.5 | 15.10.2024 | வம்சாவழி பட்டியல் | அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2025.04.22 15:11:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.